**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**
முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., L.L.M.,**
சார்பு நீதிபதி, ஆரணி,
2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04ம் நாள் புதன்கிழமை
**I.A.No.06/2025 in O.S.No.110/2018**
(TNTM 03000218/2018)

அமுதா ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

கருணாமூர்த்தி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 17.02.2025 அன்று இறுதிகாய விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.கணேஷ்,M.B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S.தனஞ்செயன்,M.A.LL.B., திரு.D.சசிகுமார்,B.A.,B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பிரசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கின் வாதியான கருணாமூர்த்தி என்பவரின் 2017–2018, 2018–2019, 2019–2020, 2020–2021, 2021–2022, 2022–2023, 2023–2024 ஆகிய ஆண்டுகளின் வருமான வரி கணக்குகள் அறிக்கை (INCOME Tax Statement Returns) மற்றும் வாதி கருணாமூர்த்தி அவர்களின் நிரந்தர கணக்கு எண்(PAN Card Xerox) அட்டையின் நகல் ஆகியவற்றை எதிர்மனுதாரர்/வாதி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கக் கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 11 விதி 16 மற்றும் பிரிவு 151 சி.பி.சி–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் அடமான வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் அடமான பத்திரம் முன்னிலைக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் அடமானம் பெற்ற இந்துமதி என்பவர் எதிர்மனுதாரர்/வாதிக்கு கடந்த 07.10.2017ம் தேதி மேடோவர் செய்து கொடுத்து எதிர்மனுதாரர்/வாதியிடம் பணம் பெற்றதாகவும், மேற்படி மேடோவர் தொகையை மனுதாரரிடமிருந்து வசூல் செய்யும் பொருட்டு மேற்படி எதிர்மனுதாரர்/வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் கடந்த 30.01.2025ம் தேதி வாதியான கருணாமூர்த்தி என்பவர் மேடோவர் செய்ததற்கு இந்துமதி என்பவரிடம் கொடுத்த பணத்திற்கு முறையாக வருமான வரி செலுத்தி உள்ளதாகவும், அதனை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளதாகவும்

குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளார். எனவே, மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் நிரூபிக்கும் பொருட்டு மேற்படி வாதியான கருணாமூர்த்தி அவர்களின் 2017–2018, 2018–2019, 2019–2020, 2020–2021, 2021–2022, 2022–2023, 2023–2024 ஆகிய ஆண்டுகளின் வருமான வரி கணக்குகள் அறிக்கை (INCOME Tax Statement Returns) மற்றும் வாதி கருணாமூர்த்தி அவர்களின் நிரந்தர கணக்கு எண்(PAN Card Xerox) அட்டையின் நகல் ஆகியவற்றை எதிர்மனுதாரர்/வாதி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தகுந்த உத்திரவிட வேண்டும் என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுவில் மேற்கண்ட மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் 2017–2018, 2018–2019, 2019–2020, 2020–2021, 2021–2022, 2023–2024 ஆகிய ஆண்டுகளின் வருமான வரி அறிக்கை (Income Tax Statement) கணக்குகள் மற்றும் நிரந்தர கணக்கு எண் (Pan Card Xerox) ஆகியவைகள் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்ய உத்திரவிடுமாறு மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டபடியும் நியாயப்படியும் செல்லதக்கதல்ல. மனுவில் கண்ட ஒரு சில சங்கதிகளை தவிர்த்து ஏனைய சங்கதிகளை வாதியே நிரூபணம் செய்ய வேண்டியது. தாவாவில் எதிர்மனுதாரர், மனுதாரரிடமிருந்து தாவா தொகை ரூ.9,21,150/– மற்றும் சேரும் வட்டி தொகை மற்றும் கோர்ட் செலவினங்கள் செலுத்த கோரி கனம் கோர்ட்டில் மேற்கண்ட தாவாவினை தாக்கல் செய்துள்ளார். தாவாவில் கண்டுள்ள வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தில் கண்டுள்ள அடமான கடன் தொகை ரூ.3,00,000/–த்தை மேற்கண்ட மனுதாரர் இந்துமதி என்பவரிடமிருந்து பெற்றுக்கொண்டு அது சம்பந்தமாக ஆரணி சார்பதிவக பதிவு எண்.5264/2006 முன்னிலைக்கு பதிவு செய்து அடமான கடன் பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார்.

3. இந்துமதி என்பவர் எதிர்மனுதாரரிடம் 07.10.2017ல் வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தில் கண்ட அசல் மற்றும் சேரும் வட்டி தொகை உள்பட பெற்றுக்கொண்டு இது சம்பந்தமாக எதிர்மனுதாரர் பெயருக்கு மேற்கண்ட வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தின் பின்புறத்தில் மேடோவர் ஆவணம் தக்க சாட்சிகளின் முன்னிலையில் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்கண்ட மேடோவர் ஆவணம் ஆனது கனம் கோர்ட்டில் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.1 ஆவணம் ஆன அடமான கடன் பத்திரத்தை நிரூபணம் செய்யும் பொருட்டு கனம் கோர்ட்டில் வா.சா.4 அடமான கடன் பத்திரத்தில் கண்ட சாட்சியான லிங்கப்பன் என்பவரையும் மற்றும் வா.சா.5 ஆன சாட்சி இந்துமதி ஆகியோரை எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யப்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வா.சா.ஆ.2 ஆவணம் ஆன மோடேவர் கடன் பத்திரத்தை நிரூபணம் செய்யும் பொருட்டு வா.சா.ஆ.1 ஆக எதிர்மனுதாரர் கருணாமூர்த்தி என்பவரையும் மற்றும் மேற்கண்ட மேடோவர் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த வா.சா.2 டி.சத்தியராஜ் என்பவரையும் மற்றும் மேடோவர் ஆவணத்தை எழுதிய ஐ.சிவசங்கரன் என்பவரை வா.சா.3 சாட்சியாகவும் கனம் கோர்ட்டில் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யப்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில், தாவாவில் கண்ட அடமான கடன் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.3,00,000/–த்தை பெற்றுக்கொண்டு

அது சம்பந்தமாக 17.10.2006ல் அடமான கடன் பத்திரம் ஆனது எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் பதிலுரையில் மனுதாரர், எதிர்மனுதாரரிடம் அடமான கடன் பத்திரத்தில் கண்ட தொகை ரூ.3,00,000/–த்தை திரும்ப செலுத்தி பைசல் செய்து விட்டதாக கூறியுள்ளார். எனவே மேற்கண்ட சங்கதியானது ஒப்புக்கொண்ட சங்கதியினை நிரூபணம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மேலும் அடமான கடன் பத்திரத்தில் கண்டுள்ள தொகையினை திரும்ப செலுத்தி பைசல் செய்துவிட்டதாக மனுதாரர் தரப்பில் குறிப்பிடபட்டு இருந்தாலும் இது சம்பந்தமாக எவ்விதமான ஆவணமும் கனம் கோர்ட்டில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பது குறிப்பிட தக்கது ஆகும்.

5. மனுதாரர், எதிர்மனுதாரரின் வருமான வரி கணக்குகள் 2017–2018, 2018–2019, 2019–2020, 2020–2021. 2021–2022, 2023–2024 ஆகிய ஆண்டுகளின் வருமான வரி கணக்குகள் அறிக்கை (Income Tax Statement) மற்றும் நிரந்தர கணக்கு எண் (pan Card Xerox) ஆகியவைகள் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டும் என்று கண்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுவானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும் மனுதாரர் எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரத்தில் கண்ட இந்துமதி என்பவர் ஏற்கனவே கனம் கோர்ட்டில் எதிர்மனுதாரர் தரப்பில் வா.சா.5 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிர்மனுதாரர் தரப்பிலும் வா.சா.1 ஆக கனம் கோர்ட்டில் சாட்சியம் அளித்துள்ளார். எனவே இது சம்பந்தமாக எதிர்மனுதாரரின் கணக்கு விபரங்கள் எதற்காக தேவைப்படுகின்றது என்று மனுதாரர் தரப்பில் தன்னுடைய வாக்குமூலத்தில் ஏதும் கூறப்படவில்லை. எதிர்மனுதாரரின் கணக்கு சம்பந்தப்பட்ட விவரங்களில் மனுதாரருக்கு எந்த அடிப்படையில் சந்தேகம் உள்ளது என்று குறிப்பிட்டு தன்னுடைய வாக்குமூலத்தில் தெளிவாக கூறவில்லை. மேலும் ஏழு வருடத்திற்குண்டான வருமான வரி கணக்கு ஆண்டுகள் சம்பந்தமாக மனுதாரருக்கு ஏன் தேவைப்படுகின்றது என்பது குறித்தும் மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெளிவாக குறிப்பிடவில்லை.

6. மனுதாரர் தாவாவில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் அடமான கடன் பத்திரத்தில் கண்ட தொகையினை பெற்றுக்கொண்டேன் என்று குறிப்பிட்டும் மற்றும் கூடுதல் பதிலுரையில் மேற்கண்ட தொகையினை செலுத்தி பைசல் செய்துவிட்டேன் என்று தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரரிடமிருந்து வருமான வரி கணக்கு சம்பந்தப்பட்ட அறிக்கை ஏதற்காக தேவைப்படுகின்றது என்பது குறித்து ஏதும் தன்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. எனவே மனுதாரர் அடமான கடன் பத்திரத்தில் கண்ட தொகையினை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் மற்றும் எதிர்மனுதாரரை அலைக்கழிக்க வேண்டும் என்று கெட்ட எண்ணத்துடன் அவருடைய வருமான வரி சம்பந்தப்பட்ட கணக்கு அறிக்கையை தாக்கல் செய்ய கோரி மேற்கண்ட மனுவிளை தாக்கல் செய்துள்ளார். மனுவிற்கு வியாஜ்ஜியமூலம் ஏதும் இல்லை. எனவே மனு நிலைக்கதக்கதல்ல. எனவே மனுவினை இவ்வெதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் சேர்த்து தள்ளுபடி செய்து வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**7. மனுதாரர் தரப்பு வாதுரையின் சுருக்கம்.**

வாதியின் வருமான கணக்கு அறிக்கைகளையும், வாதியின் Pan Card ஆகியவற்றையும் இவ்வழக்கில் வாதி ஆஜர்படுத்த உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடமான ஆவணம் எழுதிப்பெற்ற இந்துமதி என்பவருக்கு வாதி பணம் செலுத்தியதாகவும், அதன் பேரில் வாதிக்கு மேடோவர் எழுதிக்கொடுக்கப்பட்டதாகவும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதி கடந்த 31.01.2025 தேதியிட்ட குறுக்கு விசாரணையில், மேடோவர் பெரும்போது ரூ.9,00,000/- அளித்த விவரத்தை வருமான வரி செலுத்தும்போது சொல்லியிருக்கிறேன் என்றும், வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய தயாராக இருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார். எனவே. வாதி ஒப்புக்கொண்டவாறு அவருடைய வருமான வரி கணக்கு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

8. **எதிர்மனுதாரர் தரப்பு வாதுரையின் சுருக்கம்**

07.10.2017ம் தேதி இந்துமதி என்பவர் வாதிக்கு அடமான கடனை மேடோவர் செய்துள்ளார். மேடோவர் செய்யும்போது சாட்சி கையொப்பம் செய்த நபர்கள் மூலம் மேடோவர் செய்யப்பட்ட விவரம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. வாதியின் வருமான வரி கணக்கு இந்த வழக்கிற்கு அவசியம் இல்லை. பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில், 3வது பத்தியில் அடமான ஆவணம் எழுதிக்கொடுத்ததை ஒப்புக்கொண்டுள்ளார். 4வது பத்தியில் மாதம் ரூ.40,000/-ம் வீதம் 96 மாதங்கள் வாதியிடம் செலுத்தியிருப்பதாகவும், கடனை திருப்பி செலுத்திவிட்டதாகவும் கூறியிருக்கிறார். எனவே. பிரதிவாதி கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்பதை மட்டும் தான் நிரூபணம் செய்யவேண்டும். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில், 2வது பத்தியில் 6வது வரியில் பிரதிவாதிக்கும், இந்துமதிக்கும் எந்த ஒரு பண பறிமாற்றமும் இல்லை என்று முன்னர் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு முரண்பாடாக விவரம் கூறியுள்ளார். முதலில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் முந்தைய வழக்கறிஞர் குறிப்பிட்டது என்று கூறியிருப்பது ஏற்புடையதல்ல. கூடுதல் எதிர்வழக்குரையில் 4வது பத்தியில் ஏற்கனவே அடமான கடன் திருப்பி செலுத்திவிட்டதாக கூறியுள்ளார். அடமான கடன் வாங்கியதை ஒப்புக்கொண்டுள்ளார். அடமான கடனை திருப்பி செலுத்தியதை பிரதிவாதி நிரூபணம் செய்யவேண்டும். மனுதாரர் கோரியிருக்கும் வாதியின் வருமான வரி கணக்கு விவரங்கள் இவ்வழக்கிற்கு அவசியம் இல்லாத ஒன்றாகும். இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

9. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

10. **தீர்வு:-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கானது அடமான கடன் வசூல் செய்வதற்காக எதிர்மனுதாரர்/வாதியால் இந்த மனுதாரர்/பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதி இந்துமதி என்பவருக்கு அடமான அசல் வட்டி கொடுத்து தாவா

அடமானத்தை மேடோவர் பெற்றதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி கருணாமூர்த்தி கடந்த 30.01.2025 தேதியிட்ட தனது குறுக்கு விசாரணையில் மேடோவர் செய்ததற்கு இந்துமதி என்பவருக்கு கொடுத்த பணத்திற்கு வருமான வரி செலுத்தியிருப்பதாகவும், அதனை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருப்பதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிர்வழக்கை நிரூபணம் செய்ய வாதி கருணாமூர்த்தி அவர்களின் 2017-2018, 2018-2019, 2019-2020, 2020-2021. 2021-2022, 2023-2024 ஆகிய ஆண்டுகளுக்கான வருமான வரி கணக்குகள் மற்றும் வாதியின் நிரந்தர கணக்கு எண்(Pan Card Xerox) அட்டையின் நகல் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டும் என்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், வா.சா.ஆ.1ல் கண்ட அசல் மற்றும் வட்டித்தொகையை 07.10.2017 அன்று எதிர்மனுதாரர் இந்துமதி என்பவருக்கு செலுத்திவிட்டு அசல் மற்றும் சேரும் வட்டியை பெறுவதற்காக இந்துமதி எழுதிக்கொடுத்த மேடோவரின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடமான கடன் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்த நபர் வா.சா.4 ஆகவும், மேடோவர் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்த சாட்சிகளையும் வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில், 17.10.2006ல் ரூ.3,00,000/-ம் பெற்றுக்கொண்டு அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்ததாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. கூடுதல் எதிர்வழக்குரையில், அடமான கடனை பைசல் செய்துவிட்டதாக விவரம் கூறப்பட்டுள்ளது. அடமான கடன் எழுதிக்கொடுத்ததை ஒப்புக்கொண்டுள்ளதால், அதனை நிரூபணம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. அடமான கடனை திருப்பி செலுத்திவிட்டதாக எதிர்வழக்குரையில் கூறியுள்ள விவரம் மட்டுமே பிரதிவாதி நிரூபணம் செய்யவேண்டியது ஆகும். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12. வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தில் உள்ள அசல் கடன் மற்றும் வட்டித்தொகை ஆகியவை சேர்ந்து கடந்த 07.10.2017ம் ஆண்டு இந்துமதி என்பவருக்கு வாதி செலுத்திவிட்டதாகவும், அடமான கடன் பத்திரத்தில் கண்ட அசல் மற்றும் வட்டித்தொகையை இவ்வழக்கின் வாதி வசூலித்துக்கொள்ள மேடோவர் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.1 ஆன வாதி தனது 30.01.2025 தேதியிட்ட குறுக்கு விசாரணை சாட்சியத்தில், நான் ரூ.9,00,000/-ம் கொடுத்து மேடோவர் பெற்றதை வருமான வரி செலுத்தும்போது சொல்லியுள்ளேன். அதற்கான வருமான வரி கணக்கை நான் செலுத்த தயாராக உள்ளேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். வாதி ஒப்புக்கொண்டது போல் அவரின் வருமான வரி கணக்கு விவரங்களை தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13. எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்யும்போது, பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில், அடமான கடன் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதை ஒப்புக்கொண்டுள்ளார். எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையிலும் அடமான கடனை திருப்பி செலுத்திவிட்டதாக கூறியிருக்கிறார். அடமான ஆவணம் குறித்து

ஒப்புக்கொண்டுள்ளதால், அதற்கான மறுபயன் குறித்து வாதி நிரூபணம் செய்யவேண்டியது அவசியம் இல்லை என்றும், பிரதிவாதி அடமான கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்பதை பிரதிவாதி நிரூபணம் செய்யவேண்டும். இந்த வழக்கிற்கு மனுவில் கோரியுள்ள வருமான வரி கணக்குகள் அவசியம் இல்லை. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதம் ஏற்க்கும்படி இருந்தாலும், வாதி தனது குறுக்கு விசாரணையில், இந்துமதிக்கு கொடுத்த பணம் குறித்து வருமான வரி கணக்கில் விவரம் சொல்லியிருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார். வாதியின் வருமான வரி கணக்கு மற்றும் Pan Card தாக்கல் செய்வதால் வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்க்கும்படி இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. இம்மனுவில் வாதியின் வருமான வரி கணக்குகள் பல ஆண்டுகளுக்கு உரியது தாக்கல் செய்யவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. வாதி மேடோவர் பெற்ற 07.10.2017ம் தேதி அடங்கிய 2017–2018 ஆண்டிற்கான வருமான வரி கணக்கு அறிக்கை மட்டும் இவ்வழக்கிற்கு தேவையான ஆவணம் ஆகும். மனுவில் குறிப்பிட்டுள்ள மற்ற ஆண்டுகளின் வருமான வரி கணக்கு அறிக்கை இவ்வழக்கிற்கு அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

15. எதிர்மனுதாரர்/வாதி 07.10.2017 தேதி அடங்கிய 2017–2018 ஆண்டிற்கான வருமான வரி கணக்கு அறிக்கை மற்றும் வாதியின் Pan Card Xerox ஆகியவற்றை வருகின்ற 13.03.2026ம் தேதிக்குள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிட்டு இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.03.04 15:35:44 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்</u> இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.03.04 15:35:51 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.